நாள்: 26.11.2025
EP. 151/2023
பெயர் முகமது சலீம்
ம.சா.1

<u>குறுக்கு விசாரணை</u>

இந்த மனுவில் சொல்லப்பட்டுள்ள சொத்தின் கதவு எண். 44 ஆகும். கதவு எண்.44 ல் கண்ட வீடு எனக்கு உரிமைப்பட்டது என்பதைக் காட்ட வீட்டுவரி, மின்இணைப்பு ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எதிர்மனுதாரர் ஹபிபுல்லா எந்த வீட்டில் குடியிருந்து வருகிறார் எனக்கு தெரியாது. அவர் கம்பம் புலவர் தெரு, ஆலியார் சந்தில் குடியிருந்து வருகிறார். அவர் வீட்டின் கதவு எண். 44 – A என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் 44–A ல் கதவு எண் குடியிருந்து வரும் நிலையில் நாங்கள் குடியிருக்கும் 44 வீட்டிற்கு வரவில்லை என்றால் சரியல்ல, அவர் 44 வீட்டில் வந்து பிரச்சனை செய்ததால் தான் நீதிமன்ற அவமதிப்பு மனுவை தாக்கல் செய்துள்ளோம்.

அவர் பிரச்சனை செய்தது சம்பந்தமாக கம்பம் வடக்கு காவல்நிலையத்தில் 22.08.2007 ல் நான் ஒரு புகார் கொடுத்தேன். புகார் மனுவில் என்னுடைய பெயர் உள்ளதா என்றால் இல்லை, என் தந்தை கொடுத்துள்ளார். புகார் மனுவில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், எதிர் மனுதாரர் 44 வீட்டை இடைஞ்சல் செய்ததால் என் தந்தை கொடுதத புகாரின் அடிப்படையில் போலீசார் அழைத்து விசாரித்து நீதிமன்ற உத்தரவு படி நடந்து கொள்ள வேண்டுமென எச்சரித்து அனுப்பினார்கள். அதற்கு எழுத்துபூர்வமான ஆவணங்கள் எதுவும்கிடையாது. வாய்மொழியாக தான் கூறினார்கள். ம.சா.ஆ.3 புகார் மனுவில் என் தந்தை நிலத்தை நிலஅளவையர் வைத்து அளந்து எங்களை எதிர்மனுதாரர் இடைஞ்சல் செய்யக்கூடாதென புகார் கொடுத்துள்ளார்.

ம.சா.ஆ.3 புகாரை என் தந்தை நிலத்தை அளவீடு செய்யவேண்டும் என கொடுத்தார் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.4 மனு ஏற்பு ரசீதில் எதிர்மனுதாரர் பெயர் உள்ளதா என்றால் இல்லை. மனு ஏற்பு ரசீதிற்கும், ம.சா.ஆ.3 புகார் மனுவிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வீட்டு வரி ரசீதுகள், மின் இணைப்பு, தண்ணீர் இணைப்பு 44 A வீட்டிற்கு எதிர்மனுதாரர் செலுத்தியுள்ளார் என்றால் அவர் வீட்டிற்கு அவர் கட்டியுள்ளார். எதற்காக இந்த நீதிமன்ற அவமதிப்பு

மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்களுக்கு தீர்ப்பான வீட்டை அவர் சொத்து என ஆக்கிரமிப்பு செய்தார் அதனால் நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். அவர் ஆக்கிரமிப்பு செய்தது சம்பந்தமாக நீதிமன்றத்திலோ, காவல்நிலையத்திலோ புகார் கொடுத்து புகைப்படம் எடுத்தேனா என்றால் அவர் எங்களை புகைப்படம் எடுக்க விடவில்லை.

2015ம் ஆண்டு மற்றும் 2013ல் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தார். அது சம்பந்தமாக காவல்நிலையத்தில் நாங்கள் புகார் கொடுத்தோம். குழி தோண்டினார் என்று புகாரில் சொல்லவில்லை. புகாரை நான் கொடுக்கவில்லை. என் அண்ணன் கொடுத்தார். அந்த புகாரில் குழி தோண்டிய விவரத்தையும், செல்போன் கீழே விழுந்தது பற்றியும் சொல்லவில்லை, ஆக்கிரமிப்பு செய்தார் என்று தான் சொல்லியுள்ளோம். நான் சொல்வது போல் எங்கள் வீட்டில் எந்த ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றம், நான் நீதிமன்றத்தை தவறாக பயன்படுத்தி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகாரில் என் அண்ணன், எதிர்மனுதாரர் மிரட்டி வருகிறார் என்று தான் குறிபிட்டு புகார் கொடுத்துள்ளார் என்றும், குழி தோண்டியது பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. மனு ரசீதில் என்ன காரணத்திற்காக புகார் கொடுக்கப்பட்டது என சொல்லப்படவில்லை என்றால் சரிதான். முகமது சகாரியா கதவு எண்.38ல் குடியிருந்து வந்தார். எதிர்மனுதாரருக்கு புலவர் தெருவில் வீடு இருக்கும் விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த மனுவில் எதிர்மனுதாரர் முகவரி நான் தான் கொடுத்தேன் என்றால் சரியல்ல. என் அண்ணன் தான் கொடுத்துள்ளார். தற்போது வரை எதிர்மனுதாரர் முகவரி எனக்கு தெரியாது.

எதிர்மனுதாரரின் முகவரி எனக்கு முழுமையாக தெரியும் என்றும், தற்போது வழக்கிற்காக அதை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2017ல் ம.சா.ஆ.13 வழக்கறிவிப்பில் எதிர்மனுதாரர் முகவரி கம்பம், புலவர் தெரு, கதவு எண். 44A என குறிப்பிட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளோம் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. ம.சா,ஆ.13 வழக்கறிவிப்பு என் அண்ணன் மற்றும் எனக்காக அனுப்பப்பட்டது. அந்த அறிவிப்பில் 44 A என கதவு எண் காட்டப்பட்டது. என் அண்ணன் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு பற்றி எனக்கு தெரியாது. என் அண்ணன் இறந்து விட்டார். வழக்கறிவிப்பிற்கு என் அண்ணன் தான் தகவல் சொன்னார். இந்த மனுவிற்கும் என் அண்ணன் தான் தகவல் சொன்னார்.

எதிர்மனுதாரர் வீடு என் வீட்டிற்கு கிழக்கு பக்கம் உள்ளது. கதவு எண்.44 மற்றும் 44 A க்கிடையே 5 அடி இடைவெளி இருக்கும். கதவு எண். 44 காலிஇடமாக உள்ளது. அது M.S.K.அத்தாவுல்லா பெயரில் உள்ளது. அவர் சொத்திற்கும், எங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சம்பந்தம் உள்ளது. EP 151/2023 மனுதாக்கல் விவரம் எனக்கு தெரியாது. நாங்கள் போட்டுள்ள மனுவிற்கும், எதிர்மனுதாரருக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் ஒருபொழுதும் நீதிமன்ற உத்தரவை மீறவில்லை என்றால் சரியல்ல.

ஓம் M.சிவாஜி செல்லையா,
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.